# போர் வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1979 கார்த்திகை 19
சென்னை, 4—21—48

விசை 15




"சீனாவில் கம்யூனிஸ்டு படைகள் ருக்குநாள் வேகமாக முன்னேறியவண் ம் உள்ளன. சியாங்—கே. ஷேக்கின் க்கார் எந்த வினாடியிலும் வீழ்ந்துவிடக் டும் என்ற அச்சம் அனைவர்க்கும் ஏற் டுள்ளது. பொன், பொருள், படைக் ருவிகள், படைத்தலைவர்கள் போர்த் றமை அத்தனையையும் அமெரிக்கா டனை தனக்குக் கொடுத்து உதவினால் றிய தன் சர்க்கார் இனி நிலைக்காது ன்று அமெரிக்கத் தலைவர் ட்ருமனிடம் கெஞ்சுகிறார் சியாங்—கே. ஷேக். அமெரிக்கா சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக சியாங் சர்க்காருக்கு பெருவாரியான அளவில் ஆயுதங்களைத் தந்துதவுமானால், ரஷ்யா கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்ய வருவது நிச்சயம். அத்தகைய நிலை நேரிடுமாயின் சீனாவின் உள்நாட்டுப் போராட்டம் ரஷ்ய—அமெரிக்க யுத்தமாக மாறிவிடும். இந் நிலையில் ட்ருமன் என்ன செய்யப் போகிறார், சியாங்குக்கு உதவி செய்வாரா இல்லையா என்பதே இன்றைய கேள்வி."

—பத்திரிகைச் செய்தி.

நாடு 1½ அணா. வெளிநாடு 2 அணா.

# மதம்! அது இருக்கத்தான் வேண்டுமா?

[பெரியார் ஈ. வெ. ரா.]

**[மதம்! அது இருக்கத்தான் வேண்டுமா? கேட்கிறார் பெரியார்! இப்படிக் கேட்பதே பெரும் பாவம் என்றெண்ணும் "மேதைகள்" பலருண்டு இந் நாட்டில்! அவர்கள் நினைப்பு மதம் மனிதனை முன்னேற்றும் அரிய ஞானாசிரியன் என்பது! அந்த நினைப்பு எவ்வளவு தவறானது—தவறானது மட்டுமல்ல, எவ்வளவு விரைவில் மனித சமுதாயத்தை பிற்போக்குப் பாதையில் இழுத்துச் செல்லக்கூடியது என்பதை, பெரியார், இங்கு ஆதார பூர்வமாக விளக்குகிறார். பகுத்தறிவு வெளிச்சம் சிறிதும் நுழைய முடியாத ஓர் இருட்டுக் குகைபோல் இருக்கிறது, மதம் எனும் மாயக் குன்றின்மீது நின்றாடும் மக்கள் உள்ளம். அந்த இருண்ட உள்ளத்திற்கு ஒரு ஜன்னல் அமைக்கிறது இக் கட்டுரை.**

**படியுங்கள்—ரசிக்க அல்ல! சிந்திக்க!]**

மதம் என்பது கடவுளாலும் கடவுள்களால் அனுப்பப்பட்டவர்களாலும் கடவுளை அடைவதற்கும், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவதற்கும் ஏற்பட்டவைகள் என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம்.

மனிதன் நடந்து கொள்ள வேண்டியதற்கு ஆக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள்—விதிகள்— திட்டங்கள் என்பவைதான் மதம் என்பது மற்றொரு சாராரின் அபிப்பிராயம்.

எப்படி இருந்தாலும் சுயமரியாதைக்காரர்கள் மதம் என்பதைப் பற்றி கொண்டுள்ள அபிப்பிராயம் பலர் அறிந்ததேயாகும். நிர்ப்பந்தமான அல்லது மூடநம்பிக்கையானதும் பிரத்தியட்ச அனுபவத்திற்கும் சாத்தியத்துக்கும், மாறானதும் பகுத்தறிவிற்கும் ஆராய்ச்சி அல்லது விஞ்ஞானத்திற்கும் எதிரானதுமான காரியங்களையோ கருத்துக்களையோ ஆதாரங்களையோ ஏற்றுக்கொண்டு இருப்பதே மதம் என்னும், அது எதுவானாலும் அப்படிப்பட்ட மதங்களையே சுயமரியாதைக்காரர்கள் மறுக்கிறார்கள் என்பதோடு அம்மதங்களையே ஒழிக்கப் படவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

சாதாரணமாக இன்று இந்தியாவில் பெரும்பான்மையான அதாவது 100-க்கு 95 பேர்களுக்கு மேலாகவே உள்ள மக்களை ஆவாகனம் செய்து கொண்டிருக்கும் மதங்களாகிய இந்து மதமும் மற்றும் சீர்திருத்த மதங்கள் என்பவையாகிய இஸ்லாம், கிறிஸ்து, ஆரிய சமாஜம், பிர்மசமாஜம், முதலிய பல மதங்களும் நிர்ப்பந்தமான நம்பிக்கை (அதாவது நம்பித்தான் தீர வேண்டும் என்பது) அல்லது மூட நம்பிக்கை அல்லது கொள்ள முடியாததும் ஆதாரமில்லாததுமான விஷயங்களில் நம்பிக்கை வைத்தல் ஆகியவைகளையோ அல்லது இவற்றில் சிலவற்றையோ பலவற்றையோ கொண்டதாகத் தான் காணப்படுகின்றன.

சரீரம் வேறு, ஆத்மா வேறு என்றும், கடவுள் வேறு ஆத்மா வேறு என்றும், அது மனிதனுக்கும் கடவுளுக்கும் தொடர்புடையது என்றும், மனிதனையும் கடவுளையும் ஒன்று சேர்ப்பது என்றும், சரீரத்தின் கூட்டுறவால், அதன் தூண்டுதலால் ஆத்மா செய்த குற்றத்துக்கு கடவுளுடைய தண்டனைகள் ஆத்மாவுக்கு மாத்திரம்தான் கிடைக்கும் என்றும், இறந்த பிறகு அதாவது சரீரத்தை விட்டு ஆத்மா பிரிந்த பிறகு தீர்ப்பு நாளில் மறுபடியும் ஒரு சரீரத்தைப் பெற்று சித்திர புத்திரன் கணக்குப் படி தண்டனைகள் கண்டனைகள் அடையும் என்றும், செத்தவர்கள் மறுபடியும் பிறப்பார்கள் என்றும், ஒரு ஆத்மாவுக்கு பல ஜன்மங்கள் உண்டு என்றும், அந்த ஜன்மங்கள் எல்லாம் ஆத்மாவும், சரீரமும் கலந்து இருந்த காலத்தில் செய்த காரியத்துக்கு ஏற்ற விதமாகக் கிடைக்கும் என்றும், இப்படி இன்னும் எவ்வளவோ விஷயங்களைக் கொண்டவைகளே இன்று செல்வாக்குள்ளதும் இந் நாட்டில் 100க்கு 95 பேர்களுடையதுமான மதங்களாய் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மதங்களைத் தான் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்வதில்லை—ஒப்புக்கொள்ளவும் முடியாது. என்பதோடு இந்த மதங்களிலிருந்து மக்கள் விடுபட்டு அறிவுச் சுதந்திரவாதிகளாக-பகுத்தறிவுவாதிகளாக ஆகவேண்டும் என்பது சுயமரியாதைக்காரர்களின் முக்கிய இலட்சியமுமாகும்.

அதுபோலவே உலக நடப்புக்கு ஏற்படும் நன்மை தீமைகளுக்கும், இன்ப துன்பங்களுக்கும் காரண கர்த்தாவாக கடவுள் என்கின்ற ஒரு வஸ்து இருக்கிறது என்பதையும், அது மக்கள் தீண்டப்படாதவர்கள் ஆவதற்கும், மக்களை மேல் ஜாதிக்காரர்கள், முதலாளிகள், அரசர்கள் என்பவர்கள் கொடுமைப் படுத்துவதற்கும் காரணமாயிருக்கிறது என்பதையும் மனிதனுக்கு ஆக உலகில் உள்ள ஜீவராசிகள் ஆடு, மாடு, பன்றி, கோழி, பக்ஷிகள், மச்சங்கள் முதலாகியவைகள் சிருஷ்டிக்கப் பட்டது என்பதற்கும் அதுவே காரணகர்த்தாவாய் இருக்கிறது என்பதையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியை ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

மற்றும், எரிமலை, பூகம்பம், புயல்காற்று, வெள்ளக் கொடுமை ஆகியவைகளுக்கு கர்த்தாவாக

வும் விஷ ஜுரம், தொத்து நோய், கொள்ளை நோய், சூறை நோய், உளைமாந்தை ஆகிய வியாதிகளுக்கும், தேள், பாம்பு முதலிய விஷக்கிருமிகளுக்கும் புலி, சிங்கம், ஓநாய், நரி முதலிய துஷ்ட ஜெந்துக்களுக்கும், சிருஷ்டி கார்த்தாவாகவும் எலியைப் பூனை தின்பதற்கும், ஆட்டைப் புலி தின்பதற்கும், புழுப்பூச்சிகளை பட்சிகள் தின்பதற்கும், பட்சிகளை வேடர்கள் வேட்டையாடுவதற்கும் காரண கர்த்தாவாயும் இருக்கிற கடவுளையும் சுயமரியாதைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை என்பதோடு அப்படிப்பட்ட கார்த்தாவையும் ஒழிக்கவேண்டும் என்றுதான் சொல்லுகிறார்கள்.

மேலும் வேறு எப்படிப்பட்ட கடவுளானாலும் அதை வணங்கினால், அதற்கு ஆகாரம், நகை, துணி பெண்ஜாதி வைப்பாட்டி முதலியவை வைத்து பூஜை செய்தால், உயிர்பலி கொடுத்தால், இன்ன இன்ன மாதிரி தொழுதால், ஸ்தோத்திரித்தால் ஜபித்தால் மனிதன் செய்த எல்லா கெட்ட காரியங்களின் பாபங்களையும் மன்னித்துவிடுவார் என்கின்ற கடவுளையும் ஒப்புக்கொள்ளாததோடு அப்படிப்பட்ட கடவுளுணர்ச்சியையும் ஒழிக்கவேண்டும் என்றும் சொல்லுகின்றார்கள்.

கடவுளைப்பற்றிய மற்ற விஷயத்தை மற்றொரு சமயம் விவரிப்போம்.

மதம் என்னும் விஷயத்தில் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்ட மதங்கள் இருக்கக் கூடாது என்பதுதான் சுயமரியாதைக்காரர்களின் மத சம்பந்தமான அபிப்பிராயமாகும்.

ஏன் இதை முதலில் குறிப்பிடுகிறோம் என்றால் விவகாரங்களுக்கு வரும்போது ஒவ்வொரு மதக்காரரும் தங்கள் தங்கள் மதங்களுக்கு வெவ்வேறு தத்துவம் இருப்பதாகவும், சகல விதமான பகுத்தறிவு பரீக்ஷைகளுக்கும் தங்கள் மதம் நிற்கும் என்றும் சொல்லி, வாதாடும்போது சமயத்துக்குத் தகுந்தபடி பேசுவதால் நிலைமை கஷ்டத்திற்கு உள்ளாகிறது. ஆகையால் மதங்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் பல மதங்களுக்கும் உள்ள பொதுக் கொள்கைகளையே குறிப்பிட்டோம்.

மற்றும் மதம் என்னும் வார்த்தைக்கு பலவித அருத்தங்களும், கருத்துக்களும் சொல்லப்படுகின்றன.

உதாரணமாக ஒருவர் "என்னுடைய மதம் யார் மனதையும் புண்படுத்தாமலும் யாருக்கும் என்னால் கூடிய நன்மை செய்வது தான்" என்று சொல்லுகிறார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் கடவுளைப்பற்றி கவலைப் படாத நாஸ்திக மதம்தான்" என்கின்றார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் கடவுள் இல்லை; ஆத்மா இல்லை. ஆனால் கர்மத்துக்குத் தகுந்த பலன் உண்டு என்பது தான்" என்கிறார்.

மற்றொருவர் "நான் கருதியிருக்கும் மதம் திமிர் அல்லது கொழுப்பு" என்கிறார்.

மற்றொருவர் "மதம் என்னும் வார்த்தைக்கு கொள்கை அல்லது கடமை" என்பதுதான் அர்த்தம் என்கிறார்.

மற்றொருவர் "என்னுடைய மதம் மனித ஜீவ அபிமானம் தான்" என்கிறார். மற்றொருவர் "என்னுடைய மதம் பொதுவுடமை கொள்கை" என்கிறார். இப்படியே இன்னும் பலவிதமாய் மதம் என்னும் வார்த்தைக்கு தனித்தனி கருத்துக்கள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அவைகளைப்பற்றியெல்லாம் விவரிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறோம்.

ஆனால் முகப்பில் கூறிய இந்து, இஸ்லாம், கிறிஸ்த்தவம், முதலிய மதங்களின் அஸ்திவாரம் ஒன்று போலவே இருந்தாலும் அதன்மேல் கட்டப்பட்ட கட்டிடங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஒருவன் உண்மையாகவே மதம் இல்லாமல் இருப்பது நாஸ்திகம் என்று கருதிக்கொண்டு ஏதாவது ஒரு மதத்தின் பேரால் உயிர் வாழ வேண்டியவனாய் இருக்கிறான்; ஆதலால் எப்படியாவது தான் நாஸ்திகன் என்று சொல்லப்படாமல் இருக்கவேண்டும், மற்றப்படி மதக்கொள்கைகள் எது எப்படி இருந்தாலும் தான் லக்ஷியம் செய்வதில்லை என்கின்ற கருத்தின் மீதே தனக்குள் எவ்விதக் கொள்கையும் இல்லாமல் ஒரு மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஏதோ ஒரு மத வேஷத்தைப் போட்டுக்கொண்டு இருக்கவேண்டியவனாக இருக்கிறான்.

மற்றும் பலரும் அதுபோலவே மதங்களுக்கு உள்ள செல்வாக்குக்குப் பயந்துகொண்டு மதவேஷக்காரர்களாய் இருக்கிறார்கள். பரத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருப்பது போலவே இகத்தில் மேன்மை அடைவதற்கு என்று சிலர் மதவாதிகளாய் இருக்கிறார்கள்.

விளக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் பணத்துக்கு ஆகவும், பெண்ணுக்கு ஆகவும், வயிற்றுப் பிழைப்புக்கு ஆகவும், உத்தியோகத்துக்காகவும் எத்தனையோ பேர் மதவாதிகளாகவும், மதமாற்றக் காரர்களாகவும் இருக்கிறார்கள்.

பொதுவாக பார்க்கப்போனால் கடவுள் ஏற்பட்ட வெகு காலத்துக்குப் பிறகுதான் மதம் ஏற்பட்டு

(11-ம் பக்கம் பார்க்க)

அச்சில் உள்ளது! விரைவில் வருகிறது!

★

# அறப்போர்

தளபதி அண்ணாவின் எழுத்தோவியம்

★

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

# போர்வாள்

4—12—48 சனிக்கிழமை

## சென்னை நகராட்சியே, என் செய இருக்கின்றாய்?

இந்திய உபகண்டத்தை ஆட்டிப் படைத்து வந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தை நடுநடுங்க வைத்த அந்த அஞ்சாமையின் திருவுருவம் **வ. உ. சிதம்பரனாரின்** நற்பெயர் சென்னையின் ஒரு பகுதியாகிய ஜார்ஜ் டவுனுக்குச் சூட்டப்படவேண்டுமென்பது வடவேங்கடம் முதல் தென் குமரிக் கடலோரம் வரையுள்ள தமிழர்கள் அத்தனை பேருடைய கோரிக்கை. இது வெறும் கோரிக்கை மட்டுமல்ல, தமிழர்தம் உள்ளத்தினுள்ளே ஆழப் புதைந்து போயிருக்கும் வீரர் வ. உ. சியின் தீரச் செயல்களைப் பற்றிய நினைவு அலைகளின் புறத்தோற்றம். தமிழகத்தின் இந்த வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கவேண்டியது சென்னை நகர சபையின் முதற் கடமை. வேறு எந்தப் பணியைச் செய்தாலும் செய்ய முன் வராவிட்டாலும், வேறு எந்த நினைவுச் சின்னங்கள் அமைக்க எண்ணினாலும் எண்ணமிடாவிட்டாலும், வேறு யாருக்கு—எந்தத் தலைவருக்கு தன் பணிவையும் நன்றியறிதலையும் தெரிவிக்கத் துணிந்து முன் வந்தாலும் வராவிட்டாலும், சென்னை நகராட்சியினர், சென்னைப் பகுதிக்கு **சிதம்பரனார் நகர்** என்ற பெயர் சூட்டும் இந்த நற்காரியத்தைச் செய்தே இருக்கவேண்டும். ஆனால் செய்யத் தவறிவிட்டனர்.

சென்னைத் துறைமுகத் தொழிலாளர்கள் முதன் முதலாக இந்தக் கோரிக்கையை எழுப்பினர். அவர்கள்தம் எழுச்சிக் குரல் எழுந்து ஓர் ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டும் நடந்து கொண்டிருக்கிறது. என்றாலும் சென்னை நகராட்சியினரின் செவிகளில் அக் குரல் ஒலி வீழ்ந்ததாக இன்றளவும் தெரியவில்லை—சிதம்பரனார் நகர் என்ற பெயர் இந்த விநாடி வரை சூட்டப்படவில்லை—தமிழகத்தைத் தட்டி எழுப்பிய பெருந்தகைக்கு நன்றி செலுத்த மறந்துவிட்டது நகர சபை என்ற பழிச் சொல்லைத் துடைக்கவேண்டுமே என்ற எண்ணம்கூட தோன்றவில்லை சென்னை நகராட்சியினர்க்கு! இது மிக வெட்கக்கேடான நிலை. ஆனால் இந்த நிலையில்தான் இருக்கிறது சென்னை நகர சபை.

பூண்டி நீர்த் தேக்கத்திற்கு சத்திய மூர்த்தி சாஸ்திரியாரின் நினைவாக **சத்திய சாகர்** என்ற பெயரிடத் தவறவில்லை நகரசபை!

தினம் தினம் வந்துகொண்டிருக்கும் வடநாட்டுத் தலைவர்கட்கு வாழ்த்துரை மடல் வாசித்துக் கொடுக்கவும்; விருந்துபசாரங்கள் நடத்திக்கொடுக்கவும், போற்றித் திரு அகவலை இன்னிசையுடன் இசைக்கவும் ஒரு நாளும் மறக்கவில்லை நகர சபை!

டில்லி கவர்னர் ஜெனரலுக்கு ஸ்டேடியத்தில் கூட்டம் போடவும் மார்வாரி கவர்னர் பெருமகனுக்கு உள் அறையில் கூட்டம் அமைக்கவும் மறந்து போகவில்லை நகரசபை!

ஆனால் தமிழர் குலத்திலே பிறந்து, தமிழர் நலனுக்கே வாழ்ந்து, தமிழர் உரிமைக்காகவே போராடி, தமிழ் நாட்டின் உயர்வுக்காகவே செத்த

## ✓ சிறந்த சிந்தனைச் சுவடிகள்

| | | |
|---|---|---|
| காரல் மார்க்ஸ் | 1 | 0 |
| திராவிடர் போர் முரசு (**பெரியார்**) | 0 | 7 |
| Peoples' poet (C. N. A.) | 0 | 4 |
| திராவிடமொழிகளும் இந்தியும் | 0 | 6 |
| மொழிப் போராட்டம் (**நெடுஞ்செழியன்**) | 1 | 0 |
| வாழ்க்கையில் வெற்றி (**அப்துர் ரஹீம்**) | 2 | 8 |
| பேசும் பிணம் (**இராதாமணாளன்**) | 0 | 8 |
| போர்வாள் நாடகம் | 1 | 4 |
| காமாந்தகாரக் கடவுள்கள் | 0 | 8 |
| நரகாசுரப் படுகொலை | 0 | 12 |
| திராவிடநாட்டுப் பாடல்கள் | 0 | 6 |
| சிரிக்கும் வையம் (கவிதை) | 0 | 4 |
| இந்துமத ஆசார ஆபாச தரிசனி | 2 | 8 |
| தாழ்வு மனப்பான்மை | 0 | 12 |
| நாஸ்திகர் யார் (**அப்பாதுரை**) | 0 | 6 |
| கவிஞர் விழா (**தமிழ் ஒளி**) | 0 | 6 |
| கவிஞனின் காதல் | 0 | 12 |
| இந்தியாவில் சோஷலிசம் | 0 | 12 |
| இந்துமதம் தமிழர் மதமா | 0 | 8 |
| இராவணன் வித்தியாதரனா | 0 | 6 |
| தொழிலாளர் விழிப்பு | 0 | 5 |
| வேடதாரி (**ஜீவா**) | 1 | 8 |
| வேலைக்காரி (**ஜீவா**) | 1 | 8 |
| பெண்களோடு வாழ்வதெப்படி | 0 | 3 |
| பெண்களிடம் ஏன் இந்த மோகம் | 0 | 3 |

**பகுத்தறிவுப் பாசறை,** பவழக்காரத் தெரு, சென்னை.

# தந்திர வித்தைகள் மூன்று!

[ம. சிங்காரவேலர்]

1. தூரதிருஷ்டி: கண்களுக்கு மறைவாயுள்ள வஸ்துக்களையாகிலும், அல்லது காதுகளுக்குக் கேட்காத சொற்களையாகிலும், கண்களால் பாராமலும், காதுகளால் கேட்காமலும் தெரிந்து கூறுவதை தூரதிருஷ்டி ஞானமென்பர். ஒரு பெட்டியில் தூரதிருஷ்டிக்காரனுக்குத் தெரியாமல் பொருள்களை வைத்து அந்தப் பெட்டியைக் காட்டினால் அவன் அதிலுள்ள பொருள்களை பெட்டியைத் திறந்து பார்க்காமலே தெரிவிக்கின்றானாம். அல்லது எதையாகிலும் நினைத்துக்கொண்டு அவனிடம் சென்று அவனைக் கேட்டால் நினைத்த சொற்களைத் தெரிவிக்கின்றானாம். இந்த சம்பவங்களை சாதாரணமான தூரதிருஷ்டி என்று வழங்குகிறார்கள். இது அருகாமையில் நடக்கும் தோற்றங்கள். வெகு தூரத்தில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்வதும் தூரதிருஷ்டி சக்தியால் என்றும் கூறுகிறார்கள். இத்தியாதி சம்பவங்கள் உண்மையா என்று விசாரிக்கவேண்டும். மாயா வித்தையில் நம்பிக்கையுள்ள Sir William Crookes, Sir Oliwer Lodge, Sir William Barrett முதலியோர் இந்தத் தோற்றங்களில் மோசம் நடந்திருந்தபோதிலும், சில தோற்றங்களுக்குக் காரணம் தெரியாதபடியால் நமக்குத் தெரியாத சக்தியால்தான் அவை நடந்திருக்க வேண்டுமென்று கூறுகின்றார்கள். ஆனால் பெரும்பான்மை மெஞ்ஞானிகள் இந்த சம்பவங்கள் யாவும் தந்திர வித்தை என்றே மதிக்கின்றார்கள். சில சம்பவங்களில் தந்திரம் தெரியாவிடில் தந்திரக்காரனுடைய சாமார்த்தியத்தால் நமக்கு அவன் செய்யும் தந்திரம் தெரியாமல் இருக்கின்றதேயொழிய ஏதோ அபூர்வ சக்தியால் தெரிந்து சொல்வதாக எண்ண எந்தவித முகாந்திரமும் இல்லை என்பார்கள். இந்தத் தந்திரத்தை பரீட்சித்தவரை, பலதோற்றங்களின் தந்திரம் வெளிப்பட்டே வருகிறது. இந்த மோசப் கோர்ட்டிலும் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒரு பெரிய மனுஷி முன்பாக பெட்டியில் இறந்து போனவருடைய மோதிரம், கண்ணாடி இன்னும் பல வஸ்துக்களைப் போட்டு மூடி வைக்கப்பட்டது. அந்த அம்மை பெட்டியினுள் வைத்திருக்கும் வஸ்துக்களின் விபரங்களை தெரிவித்தனளாம். ஆனால் சில நாள் கழித்து இதன் ரகசியம் வெளிப்பட்டது. இந்த அம்மையுடன் கூட வந்த தந்திரக்காரன் யாவருக்கும் முன்பாக செய்த தந்திரத்தால் நிகழ்ந்ததாகத் தெரிய வந்தது. அவன் காட்டிய பெட்டியை அந்த இடத்தில் வைத்துவிட்டு உள்ளே கொண்டுபோன பெட்டியைத் திறந்து அதிலிருக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

## வ. உ. சி. நினைவுநாள்

28—11—48 ஞாயிறு மாலை சென்னை இராயபுரம் தமிழ் இளைஞர் கழகச் சார்பில் வ. உ. சி. நினைவுநாள் பொதுக்கூட்டம் தோழர் பான்ஸ் பரமானந்தம் M. C. (காங்கிரஸ்) தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜெயசந்திரன், மா. இளஞ்செழியன் B. A. Hons, என். ஜீவரத்தினம் எம். சி, அர்ச்சுனன் (சோஷலிஸ்ட்) ஆகியோர் மறைந்த மாவீரரின் சிறப்பியல்புகளை விளக்கிப் பேசினர்.

---

ஒரு தமிழ்ப் பெருமகனுக்கு—தீரத் தலைவருக்கு—கப்பலோட்டி புகழ்படைத்த மாவீரருக்கு—வ.உ. சிதம்பரம் பிள்ளைக்கு நன்றி செலுத்தத்தான் நேரமில்லை இந்த நகரசபைக்கு! என்ன விபரீதம்!

சென்ற ஓர் ஆண்டு காலமாக சென்னை நகரசபை செய்யத் தவறிய இந் நன்றிகெட்ட செயலை இந்த ஆண்டு சிதம்பரனார் நினைவு நாள் தமிழகம் எங்கணும் கொண்டாடப்பட்டபோது தமிழர்கள் ஆங்காங்கே நினைவூட்டியிருக்கின்றனர். இப்போதிருப்பது புதிய நகரசபை! பல புதிய உறுப்பினர்கள் நகரசபைக்குள் நுழைந்திருக்கின்றனர்! இவர்களாவது இந்தக் கடமையை நிறைவேற்றி வைப்பார்களா? அல்லது இவர்களும் தம் முன்னோர் சென்ற பழம் பாதையிலேயே சென்று, அவர்தமைப்போலவே "நன்றி கொன்றான் தமிழன்" எனும் கொடும் சொல்லுக்கு ஆளாகப் போகின்றனரா? என் செய இருக்கின்றார் இவர்? தமிழகம் கேட்கிறது, நாமும் கேட்கிறோம், இவர்கள் என் செய இருக்கின்றார்கள்? சிதம்பரனார் நகர் என்ற பெயர் சூட்டு விழாவை உடனடியாக நிறைவேற்றி, அதில் சர்வ கட்சித் தலைவர்களும் கலந்துகொள்வதற்காக ஏற்பாடுகளைச் செய்து, இவர்களின் "முன்னவர்கள்" செய்த "பாவத்"திற்குப் "பிராயச்சித்தம்" தேடிக் கொள்ள இருக்கிறார்களா அல்லது எமக்கென்ன தமிழர்தம் உள்ளம் எண்ணும் எண்ணங்களைப் பற்றி, "நாம் இவைபற்றியெல்லாம் கவலை கொள்ளமாட்டோம்—அடுத்தாற்போல வர இருக்கும் வடநாட்டுத் தலைவர்கள் யார் அதைச் சொல்லுங்கள் அவர்கட்கு வரவேற்புத் தான் வாசிக்க ஏற்பாடு செய்கிறோம்" என்று சொல்லப்போகிறார்களா?

என்ன செய்ய இருக்கிறார்கள்?

# புராணக் கதைகள், பிறநாட்டில்!

புராணக் கதைகள் அதாவது கட்டுக்கதைகள் இல்லாத நாடுகளே இந்த உலகத்தில் இல்லை. அறிவு வளர்ச்சியடையாத பண்டைக்கால மக்கள் இயற்கைப் பொருள்களின் உண்மைத் தோற்றங்களையும், காரணங்களையும் அறியாமல் பல திறப்பட்ட கட்டுக்கதைகள் எழுதி வைத்தனர். சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள், கிரகணங்கள் முதலியவைகளைப்பற்றி நமது புராணங்கள் கூறும் கட்டுரைகளை நாம் நன்கு அறிவோம்.

அவைகளைப் போன்ற கதைகள் மேனாடுகளிலும் இருந்தே வந்திருக்கின்றன.

## சூரியனும், சந்திரனும்

சூரிய சந்திரர்களைப்பற்றி எஸ்கிமோ ஜாதியாருக்குள் வழங்கும் ஒரு கதை வேடிக்கையாக இருப்பதுமன்றி மனோகரமாகவுமிருக்கிறது.

ஒரு பெண் ஒரு விருந்துக்குச் சென்றிருந்தாளாம். விருந்துண்ட பின்னர் இரவு நள்ளிருளில் எல்லாரும் கூடியாடி விளையாடிக்கொண்டிருந்தனர். ஒரு இளைஞன் அந்நாட்டு வழக்கப்படி காதலைத் தெரிவிக்கும் பொருட்டு அப் பெண்ணின் தோளைப்பிடித்து அசைத்தானாம்.

இருட்டிலே தன்னைக் காதலித்தவன் யார் என்பதை அப் பெண்ணால் அறிந்துகொள்ள முடியவில்லை. உடனே அவள் ஒரு தந்திரம் செய்தாளாம்.

புகைப்போக்கியண்டை சென்று தன் கைகளில் கரியைப் பூசிக்கொண்டு கூட்டத்தில் கலந்து தன் காதலனைக் கண்டுபிடிக்க ஆயத்தமாயிருந்தாளாம். மீண்டும் அவளது காதலன் அங்கே தோன்றி அவளது தோளைப் பிடித்து அசைத்தானாம். உடனே அவள் அவனது கன்னத்தில் கரியைப் பூசிவிட்டாளாம். அப்பால் விளக்குக் கொண்டு வரப்பட்டபோது தன்னைக் காதலித்தவன் தன் தமையன் என உணர்ந்து உடல் நடுங்கி ஓட்டமெடுத்தாளாம்.

காதலுக்குக் கண்ணுண்டா? மூக்குண்டா? முறைதானுண்டா!

காதலனும் காதலியைத் துரத்திக்கொண்டு அவள் பின்னால் ஓடினான். காதலி அகப்படவில்லை; காதலனும் விடவில்லை. இவ்வண்ணம் இருவரும் வெகு நாள் ஓடிக்கொண்டே இருந்தனர். இறுதியில் காதலி பூமியின் எல்லையை அடைந்தாள். காதலனும் நெருங்கினான். வேறு வழியில்லை. காதலி வானமண்டலத்தில் குதித்து மறையத் தொடங்கினாள். காதலனும் அவளைப் பின் பற்றினான். வான மண்டலத்தை யடைந்ததும் காதலி சூரியன் ஆனாளாம்; காதலன் சந்திரனானான். பின்னும் ஓட்டம் நிற்கவில்லையாம். இப்பொழுதும் சந்திரன் சூரியனைப் பின் தொடர்ந்து விரட்டிக்கொண்டே இருப்பதற்கு அவனது காதலே காரணமாம்: காதலி தேய்த்த கரிக்கு அறிகுறியாகவே இப்பொழுதும் சந்திரன் முகம் மாதம் ஒருமுறை கரிமயமாக இருக்கிறதாம். ட்யூட்டானிக் (Tew onic) பாஷைகளில் சூரியனைப் பெண்ணாகவும் சந்திரனை ஆணாகவும் வழங்குவது மரபு.

பிற்காலத்தில் சில தேசத்தார் சூரியனை ஆணாகவும் சூரியனுக்கு முன்தோன்றும் உஷையைப் (விடிபொழுதை) பெண்ணாகவும் சூரியனை உஷையின் காதலனாகவும் அவன் அவளைப் பிடிக்கச் செல்வதாகவும் வழங்கியுள்ளனர்.

## நக்ஷத்திரங்கள்

நக்ஷத்திரங்களைப்பற்றிய கதைகளும் மிகவும் வியக்கத்தக்கவைகளாகவே இருக்கின்றன. ஆசிய தேசக்கதை யொன்று பின்வருமாறு:—

சூரியனும் சந்திரனும் பெண்களே. நாம் இப்பொழுது காணும் நக்ஷத்திரங்கள் எல்லாம் சந்திரனின் குழந்தைகள். சூரியனுக்கும் ஒரு காலத்திலே ஏராளமான குழந்தைகள் இருந்தன. சூரியன், சந்திரன் அவற்றின் குழந்தைகள் முதலியவைகளின் ஒளியை உலக மக்கள் தாங்கமாட்டார்கள் என பயந்து தம் மக்களைக் கொன்றுவிடுவதென்று சூரியனும் சந்திரனும் தீர்மானித்தன. ஒப்பந்தப்படி சூரியன் தன் குழந்தைகளை யெல்லாம் விழுங்கிவிட்டான். சந்திரன் தந்திரசாலி — தன் குழந்தைகளை விழுங்கவில்லை. சூரியன் தன் குழந்தைகளை விழுங்கு மட்டும், சந்திரன் தன் குழந்தைகளை வான மண்டலத்திலே ஒளித்து வைத்திருந்ததாம்.

சூரியன் தன் குழந்தைகளையெல்லாம் விழுங்கிய பிறகு சந்திரன் தன் குழந்தைகளை அழைத்ததாம். சந்திரனின் குழந்தைகளைக் கண்டதும் சூரியனுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. உடனே சந்திரனைக் கொல்லும்படி சூரியன் பாய்ந்தது. சந்திரன் ஓட்டம் பிடித்தது. இரண்டும் நெடுநாள் ஓடின. சில சமயங்களில் சூரியன் சந்திரனை நெருங்கிவிடுமாம். அப்பொழுதுதான் கிரகணம் உண்டாகிறதாம்.

அதிகாலையில் சூரியன் தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை விழுங்குவதை நாம் எல்லாரும் பார்க்கிறோம். சந்திரனோ தன் குழந்தைகளான நக்ஷத்திரங்களை பகற்பொழுதில் ஒளித்துவைக்கிறது; இரவு சூரியன் வெகு தூரத்தில் இருக்கையில் தன் குழந்தைகளை வெளியில் கொண்டுவருகிறது.

## கிரகணங்கள்

சூரிய சந்திர கிரகணங்கள் எல்லா நாடுகளிலும் மிகவும் பயங்கரமான உற்பாதங்களாகவே கருதப்படுகின்றன. கிரகணங்கள் உண்டாவதற்கு பேய் பிசாசுகளும் பூதங்களுமே காரணமென்று பல இடங்களில் நம்பப்படுகின்றது!

சூரியனையும் சந்திரனையும் விழுங்க முயலும் பூதங்களினாலே

# ஒழியத்தான் வேண்டும்

மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் சென்ற ஒரு மாத காலமாக "ஸ்ட்ரைக்" செய்து வருகின்றனர். அவர்களுடைய கோரிக்கை பி. ஏ, பி. எஸ்சி, இன்டர்மீடியட் முதலிய கல்லூரி வகுப்புகளில் இரண்டாவதாண்டு இறுதியில் நடைபெறும் "செலக்ஷன்" தேர்வு என்னும் அநாகரிக முறை ஒழியவேண்டும் என்பது. இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமானது.

"என் கல்லூரியில் மட்டும்தானா இந்த அநாகரிக முறை இருக்கிறது—எல்லாக் கல்லூரிகளிலும் தான் இருக்கிறது—எல்லா இடங்களிலும் எடுபட்டால்தானே நானும் எடுக்கமுடியும்—நான் மட்டும் தனியாக என்ன செய்யமுடியும் ?—இங்கே மட்டும் ஸ்ட்ரைக் செய்து என்ன பயன் ?" என்று கேட்கிறார் கல்லூரித் தலைவர்! இவர் கேட்பதும் உண்மையில் நியாயமானதே.

மாணவர்கள் முழக்கமிடுவதுபோல செலக்ஷன் என்னும் பத்தாம்பசலி வழக்கம் ஒழியத்தான் வேண்டும். கல்லூரித் தலைவர் கஷ்டப்பட்டு விளக்குவது போல அது மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மட்டுமல்ல எல்லாக் கல்லூரிகளிலும் ஒருசேர ஒழிந்தே தீர வேண்டும்.

இன்டர்மீடியட், பி. ஏ. முதலிய வகுப்புகள் தனித்தனி இரண்டு ஆண்டுகள் படிக்கப்பட வேண்டியவை இரண்டாவதாண்டு முடிவில், பல்கலைக்கழகம், மாணவர்களைப் பரீட்சிக்கிறது. இது, பொதுப் பரீட்சை. இதற்கு மூன்று மாதங்கள் முன்னதாக அந்தந்தக் கல்லூரிகள் தனித்தனியே ஒரு பரீட்சை நடத்தி, பல்கலைக்கழகப்பரீட்சைக்குப்போவதற்காகவே இரண்டு ஆண்டுகளாகப் படித்துவரும் மாணவர்களில் சிலரையோ பலரையோ அந்தப் பரீட்சைக்குப் போகாதபடி தடுத்து நிறுத்திவிடுகின்றனர். இதுதான் செலக்ஷன் பரீட்சை என்னும் பொறுக்குத் தேர்வு! இது எவ்வளவு அர்த்தமற்றது, அநாவசியமானது, மாணவர்களை வீணுக்கு வதைப்பது, என்பதை நாம் விளக்கிச் சொல்வது வீண்வேலை—பொறுக்குத் தேர்வு ஒழிக்கப்படவேண்டியதே என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

எப்பொழுது ஒரு மாணவன் பள்ளியிறுதி வகுப்பில் (S. S. L. C.) தேர்ச்சி பெற்றானோ அப்போதே அவன் கல்லூரியில் சேர தகுதி பெற்றுவிட்டான் என்றுதான் அர்த்தம். அதேபோல எப்போது ஒ[ரு] மாணவன் இடைநிலை [இன்டர் மீடியட்] வகுப்பி[ல்] சேர்க்கப்பட்டுவிட்டானோ அப்போதே அவன் அ[ந்த] வகுப்பிற்குரிய பொதுப் பரீட்சையில் உட்கார[த்] தகுதி பெற்றுவிட்டான் என்றுதான் பொருள். ஆகவே இதற்கு மாறாக உள்ள கட்டுப்பாடுகள், சட்[டத்] திட்டங்கள், அமைப்பு முறைகள், பொறுக்குத் தேர்[வு]கள் இன்ன பிற அத்தனையும் இடித்துத் தகர்க்கப்பட வேண்டும் என்பதே நம்முடைய திட்டமான கருத்து.

பொறுக்குத் தேர்வில் தோற்றுவிடும் மாணவர்கள் அத்தனைபேரும் பொதுத் தேர்வுக்கு அனுப்பப்பட்டிருந்தால் தோற்றுத்தான் போய்விடுவார்கள் என்றோ பொறுக்குத் தேர்வில் வெற்றி பெற்று விடுகிற மாணவர்கள் எல்லாம் பொதுத் தேர்வில் தவறுவதே கிடையாது என்றோ எந்தக் கல்வி நிபுணரும் கூறமுடியாது. பிறகு எதற்கு பொறுக்குத் தேர்வு? மாணவர்களின் கல்வி, நேரம், உழைப்பு இவற்றையும், பெற்றோர்கள் பாடுபட்டுத் தேடிய பணத்தையும் பாழாக்குவதற்கா?

பள்ளியிறுதி வகுப்பில் இத்தனை ஆண்டுகளாக நடைபெற்றுவந்த பொறுக்குத் தேர்வு இந்த ஆண்டு முதல் கிடையாது என்று அறிவித்துவிட்டனர் சென்னை சர்க்கார். இது மிக நல்ல முடிவு. இதே முடிவுக்கு சென்னை பல்கலைக் கழகமும் வந்து, கல்லூரி வகுப்புகளில் நடைபெறும் பொறுக்குத் தேர்வுக்கு இந்த ஆண்டு முதலே முற்றும் புள்ளி வைத்துவிடட்டும். இதனால் மாணவர்களின் தகுதியோ திறமையோ இம்மியளவும் குறைந்துவிடாது. ஐயமிருந்தால் எந்தக் கல்வி நிபுணரை வேண்டுமானாலும் கேட்டுப் பார்க்கட்டும். மாணவர்களின் அறிவுத் திறமையை அளப்பதற்கு "பரீட்சை" என்பதே சரியான அளவுகோல் அல்ல என்பதை உலகம் முழுவதுமுள்ள கல்வி நிபுணர்கள் அறிவியல் நூல்வழி எடுத்து விளக்கும் இக் காலத்தில் பொறுக்குத் தேர்வுகள் இந்நாட்டில் ஜாம் ஜாமென நடந்துகொண்டிருப்பது நகைப்புக்கிடமானது மட்டுமல்ல இந்த விஞ்ஞான காலத்தில் தக்ளியால் நூல் நூற்பதுபோன்ற அவ்வளவு பைத்தியக்காரத்தனமானது.

இக்கட்டுரை அச்சுக்குப் போகும் தறுவாயில், மாணவர்கள் ஸ்ட்ரைக் மதுரையிலிருந்து திருநெல்வேலி திருச்சி முதலிய பல இடங்களுக்கும் பரவிவருவதாகச் செய்திகள் வந்து குவிகின்றன. சர்க்கார் உடனே தலையிட்டு செலக்ஷன் முறையை நிறுத்த வேண்டும்.

—

[சூ]ரிய சந்திர கிரகணங்கள் தோன்[று]வதாக சீனர்கள் நம்புகின்றனர். [எ]னவே கிரகண காலத்து பூதங்களை வெருட்டியோட்டும் பொருட்டு [த]ப்பட்டைகளையும் கொப்பரைகளையும் அடித்து சப்தமுண்டாக்கு[வ]ார்களாம். இந்தியாவிலும் கிர[க]ண காலங்களில் மணியடிப்[ப]துண்டு.

[...]பெரிய நாய்கள் சந்திரனை [வி]ரட்டுவதினாலேயே சந்திர கிரகணம் உண்டாவதாக அமெரிக்க சுதேசிகள் நம்புகிறார்கள். வெண்ணிலா சிவப்பாகும்வரை நாய்கள் சந்திரனை விரட்டுமாம். நாய்கள் கடித்த காயங்களிலிருந்து இரத்தம் வடிவதனாலேயே விடியற் காலையில் வான மண்டலத்தில் சிவப்பு வர்ணம் தோன்றுகிறதாம்.

பின்னால் வரப்போகும் துன்பங்களுக்கு சூரிய சந்திர கிரணங்கள் அறிகுறியென்று மிகச் சமீப காலம்வரை ஐரோப்பியர்களும் நம்பியிருந்தார்கள்!

அறிவு விளக்கம் பெற்று நாகரிக மடையாத தேசங்களில் எல்லாம் குருட்டு நம்பிக்கைகளும் கட்டுக்கதைகளும் இருந்தே வந்திருக்கின்றன. விஞ்ஞான சாஸ்திரம் விருத்தியடைய அடையக் கட்டுக்கதைகளும் குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்துவிடுகின்றன.

—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சாமான்கள் விபரங்களை வெளியிலிருக்கும் அம்மைக்கு சைகை மூலமாகத் தெரிவிக்க, அந்த அம்மை சபையில் மெதுவாக அந்தந்த வஸ்துக்களை தானே அறிந்து சொல்வதுபோல் தெரிவித்தனளாம் இந்த வித்தையின் சூழ்ச்சி தெரிந்தும் முன்பும் சில மெஞ்ஞானிகள் இதை வித்தை என்றே கருதி வந்தார்கள். ஆனால் விசாரித்த பிறகு நேர்ந்த மோசத்தை அறிந்தும் இந்த மெஞ்ஞானிகளுக்கு அறிவு உண்டானதோ நமக்குத் தெரியாது ஏனெனில் சில மெஞ்ஞானிகளுக்கு மதப்பற்றால் மதமயக்கம் அவர்களை விட்டபாடில்லை என்று தெரிய வருகிறது. எல்லா வாசனைகளிலும் மதவாசனை புராதனமானது. இந்த வாசனைப்பற்றால், மெஞ்ஞானிகளும் சில விஷயங்களில் ஏமாந்து போகின்றனர். மதப்பற்று எந்தக் காலத்தில் மாந்தரை விட்டு ஒழிகின்றதோ அந்தக் காலத்தில்தான் உலகிலுள்ள பித்தலாட்டங்களும் ஒழியுமென அறிக.

கும்பகோணத்தருகிலுள்ள வலங்கைமான் கிராமத்தில் ஒரு தூரதிருஷ்டியோன் இருப்பதாகவும் அவன் நினைத்ததைச் சொல்வதாகவும், அதற்கு ரூபா ஐந்து கொடுக்க வேண்டுமென்றும் கேள்வி. மற்ற தந்திரங்களைப் போல் இதுவும் ஓர் தந்திரமென்றே கூறல் வேண்டும். இவன் நாம் நினைத்ததைச் சொல்வதற்கு பல சூழ்ச்சிகளுண்டு. அவையாவன.—அவன் தன்னை மாயத்தூக்கத்தில் வைத்துக்கொள்ளுகிறான். அதனால் வெளிச் சத்தமும், சந்தடியும், தனக்குக் கேட்பதில்லை. ஆனால் நமது செய்கைகளையும், உதடு அசைதலையும், மெதுவாகப் பேசுவதையும் அவன் கவனிக்கிறான். நாம் எண்ணிய எண்ணத்தை நாம் மெதுவாகப் பேசுகிறோம், அதாவது நடத்தை மெஞ்ஞானிகள் சொல்வதுபோல் நாம் மெதுவாகப் பேசுவதே நமது எண்ணமானபடியால் அந்தப் பேச்சை தூரதிருஷ்டியோன் கேட்கக்கூடும். அல்லது நமது உதட்டின் அசைவாலும் அவன் நமது "எண்ணத்தை" தெரிந்துகொள்ளக்கூடும். இத்தியாதி மூகாந்திரங்களால் தெரிந்து சொல்கின்றான் என்ற உண்மையை விட்டுவிட்டு நாம் நினைத்ததை கணேசர் அருளால் தெரிந்து சொல்கிறான் என்றும் அல்லது மாயசக்தியால் தெரிந்து சொல்லுகின்றான். என்றும் பிதற்றுகின்றார்கள். உண்மையில் சாதாரண சைகைகளைக் கொண்டே நமது "எண்ணங்களை"த் தெரிந்து சொல்கின்றார்கள்.

இதன் சம்பந்தமாக தெய்வமாடி, நமது உள்ளத்திலுள்ளவைகளை சொல்லும் வித்தையை கவனிக்கலாம். தெய்வமாடுகின்றவராகிலும் அல்லது மாய்கை தூக்கத்திலுள்ளவனும் தாறுமாறாய்க் கேள்விகளைக் கேட்கின்றார்கள். அந்தக் கேள்விகள் நமக்குத் தாறுமாறாகக் காணப்படினும் மாயவாதிக்கு அக் கேள்விகள் அனுகூலமானவைகளே. இந்தக் கேள்விகளைக் கேட்கும்போதே தலையை அசைக்கின்றோம். அந்த கேள்விகளுக்கு விடையை நாம் அறியாமலே உளறுகின்றோம். இதனை நுட்பமாக அறிந்துகொண்டுவரும் மாயவாதி, தெய்வ ஆவேசத்தால் தான் நமது உள்ளத்தில் உள்ள கோரிக்கைகளைத் தெரிந்து சொல்வதுபோல் நடிக்கிறான். இதுதான் இத்தியாதி தூரதிருஷ்டி சம்பவங்களில் நடந்துவரும் தந்திரம் இதனை அறியாது அம்மன் சொன்னாள், விநாயகர் அருள், தெய்வ ஆவேசம், செத்தவன் ஆன்மா தெரிவித்தது மறைவான சக்தி, அபூர்வமான பார்வை, என்று மூடமக்கள் பிதற்றுகின்றார்கள். இவர்களைப்போலவே மதப்பற்றால் சில விஞ்ஞானிகளும் உளறுகின்றார்கள்.

இதன் விஷயமாக இன்னொரு பித்தலாட்டமும் செய்கின்றார்கள். இவர்கள் தங்களைக் காணவருகின்றவர்களின் விருத்தாந்தங்களை தங்கள் ஆட்களைக்கொண்டு விசாரிக்கின்றார்கள். இதனைத் தெரிந்துகொண்டு தாங்களே மாய சக்தியால் தெரிந்துகொள்வதுபோல் நடிக்கின்றார்கள். இவர்கள் சொல்வதில் எத்தனையோ பிழைகள் இருக்கின்றன. ஆனால் நமது அவாவினால், அந்தப் பிழைகளைத் தள்ளிவிட்டு நமக்கு வேண்டிய அனுகூலமான வார்த்தைகளை மாத்திரம் எடுத்துக்கொள்கின்றோம். இந்த மனவழுக்கைக் கடந்து உள்ளதை உள்ளபடி அறியவேண்டுமென்போருக்கு செய்யும் தந்திரங்கள் எளிதில் விளங்கும். சென்ற சில வருடங்களுக்கு முன்பு இறந்த பிரபல மாந்திரீகனாகிய அவுடுனி என்போன் செய்த மாய வித்தைகளில் சிலவற்றை இன்னும் அறியக்கூடவில்லை என்றால் சாமான்ய மக்களும், மதப் பற்றுடையவர்களும் மாய வித்தைகளில் நம்பிக்கை வைப்பது ஆச்சரியமோ! இந்த மாய வித்தைகளில் கூறியுள்ள சம்பவங்கள் சில சென்னை அடையாறிலுள்ள பிரம்மஞானக் கூட்டத்தில் நடந்து வந்ததை நமது தோழர் பலர் அறிவார்கள். இவைகள் எல்லாம் மோசமென்று சில வருஷங்களுக்கு முன் விளம்பரப் படுத்தப்பட்டிருப்பதை Fraud of Theosophy by Maskelyne, Isis, very much unveiled hy Garret என்ற சிறு புத்தகங்களை வாசித்தறியலாம்.

2. **புதையலைக் கண்டுபிடித்தல் :—** புதைந்து கிடக்கும் திரவியங்களை ஞானக் கண்ணால் கண்டு பிடிப்பதென்ற பித்தலாட்டத்தை நம்பி அநேகர் மோசம் போய் இருக்கின்றார்கள். இன்னும் அந்த நம்பிக்கை பலபேருக்குண்டு. மனிதனுடைய பேராசையால் இந்த நம்பிக்கையுண்டாகின்றது. நமக்கு எல்லோருக்கும், கஷ்டப்படாமலே செல்வம் தானாக வரவேண்டுமென்ற ஆசையுண்டு. இந்த ஆசையால் எங்கேயாவது திரவியம் அகப்படுமா என்ற அவா மேன்மேலும் உறுத்த இதனைக் கண்டு பிடிப்போர் Water Diviner என்ற பித்தலாட்டக்காரர் வசமாகின்றனர். இந்த அவாவைத் திருப்தி செய்யும் மோசக்காரர்கள் எங்கும் இருக்கின்றார்கள். இரண்டொரு இடங்களில் புதைந்த திரவியத்தைத் தேடப்போய் சில குடும்பங்கள் அழிந்தது தெரியும். இதோடு போவதில்லை, சில மந்திரக்


**மூல வியாதிகளுக்கு**

"யௌவன பிராஷ்"

**(கருணைக் கிழங்கு லேகியம்)**

ஆபரேஷன் பயன்தராது. மூல முளைகள், ரத்தம், சீழ் வடிதல், குத்துவலி, மலபந்தம், வாய்வு, பவுத்திரக் கட்டிகள், 3 வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து, சுகம் காணலாம். 12 நாள் யௌவன பிராஷ் ரூ 3. 12 நாள் நாகபஸ்பம் ரூ. 2.

**சரஸ்வதி வைத்தியசாலை**

பழனி S. I.

காரர்கள் பேச்சைக்கேட்டு திரவியத்தைக் காக்கும் பூதத்திற்கு நரபலிகொடுத்தோர் தூக்கிடப்பட்டார்கள். புதைந்து கிடக்கும் பணத்தை எடுக்கப்போய் தூக்கிலிடப்பட வேண்டியதாயிற்று. இது என்ன மூடத்தனமென்று எண்ணுகின்றீர்கள்? இந்த மூட நம்பிக்கையை விட அதிகமான மூடத்தனம்என்ன இருக்கிறது? இந்தப் பித்தலாட்டத்தை நம்பும்படி மந்திரக்காரர் செய்யும் மோசம் ஒன்றுண்டு, அதாவது இந்த பித்தலாட்டத்தைச் செய்வதற்கு முன்பே சில பழைய சவரன்களை வேண்டிய இடத்தில் புதைத்து விடுகின்றார்கள். இதனைத் தெரியாத பேதைகள் குறித்த இடத்தில் தோண்டிப் பார்த்து சில பழையசவரன்கள் அகப்பட்டதால் மந்திரக்காரன் சொல்லை நம்பி இன்னும் அதிகபணம் கிடைக்குமென்ற அவாவால் மேலும் மேலும் பணத்தைச் செலவு செய்து நஷ்டமடைகின்றார்கள், மந்திரக்காரனுடைய தோழர்கள் அக்கம் பக்கத்தில் தாங்களே புதைத்து வைத்த பணத்தைக் கண்டுபிடித்த சம்பவத்தை அக்கம் பக்கங்களில் விளம்பரம் செய்கின்றார்கள். அதனால் இவர்கள்மேல் பலஇடங்களில் நம்பிக்கை உண்டாக்கிக் கோள்கின்றார்கள். இத்தியாதி சூழ்ச்சிகளால் இந்த மோசம் எங்கும் பரவுகின்றது. புதையலைக் கண்டுபிடிக்கும் வித்தை இதுவே. இதுவோர்பெருத்த மோசமென்பதற்குத் தடையில்லை. ஞானக்கண்ணால் தெரிந்து சொல்வதென்பதும் சுத்தப் பொய்யென அறிக.

சில இடங்களில் புதைத்துவைத்த திரவியம் அகப்படுவது வாஸ்தவம். யாரோ சிலர் பண்டைக்காலத்தில் புதைத்து வைத்த சவரன் வீடுகட்டக் கடைக்காலுக்குத் தோண்டும்போதும், கிணறு வெட்டும்போதும் தற்செயலாக அகப்படுவது ஏகதேசம். இதனைக்கண்ட சிலர், தங்கள் அவாவினால் தங்களுக்கும் அகப்படாதாவென்ற கோரிக்கை மிகுந்து பரவும் அந்த அவாவை திருப்திசெய்ய, மோசவேஷக்காரர் எங்கும் கிளம்புகிறார்கள். இந்தப் புதைக்கப்பட்ட திரவியங்களை பூதங்கள் காக்கின்றனவாம்! அவைகளுக்கு நரபலி கொடுக்க வேண்டுமாம்!! இத்தியாதி மோசக் கதைகளைக்கட்டி, ஏழைகளை ஏமாற்றுகின்றார்கள். இவ்வித அறியாமை நமது நாட்டை விட்டு ஒழியுங்காலம் எக்காலமோ!

**3. தண்ணீர் கண்டு பிடித்தல்** என்ற ஓர் வித்தையுண்டு. அதாவது கண்ணுக்குப் புலப்படாத தண்ணீர்ப் பாங்கைக் கண்டு பிடித்தல் எனப்படும் இந்த வித்தையில், இரண்டுவித முண்டு. அவையான விஞ்ஞான முறையொன்று, போலி ஞான முறை மற்றொன்று.

விஞ்ஞான முறையில் அநேக இடங்களில் தண்ணீர் வளத்தை கண்டு பிடிக்கலாம். அம்முறையாவன அக்கம் பக்கத்திலுள்ள நீர் வளப்பதைக்கொண்டும், கிணற்று நீர், ஊற்று நீர், மலை சுனை, அருகாமையிலுள்ள ஆற்று ஜலம் அதன் மணல் முதலிய வசதிகளைக் கொண்டும் அடி ஜலத்தை நிர்ணயம செய்தலாகும். பள்ளம் வெட்டி, நீரோட்டத்தைப் பார்த்தும், அடி நீரைக் கண்டுபிடிக்கலாம். தோண்டத் தோண்டவரும் மணல், கல், உப்பு, முதலிய படைகளாலும் நீர் வளப்பம் தெரியும். இது பண்டைக்கால மெஞ்ஞான முறை. தற்காலத்தில், மேற்சொன்ன அனுமான ஞானத்தால் அல்லாமல், பிரத்தியட்சமாகவே அடியிலிருக்கும் ஜலத்தைக்கண்டு பிடிக்கலாம். அதாவது, குழாய்களைக்கொண்டு பூமியுள் துளை செய்து அடி நீரைக் கண்டுபிடித்தல். 500 1000 அடி ஆழத்தில் கூட துளை செய்து அங்கிருக்கும் நீர்ப்பாங்கை மேலே கொண்டு வந்து நேரே பார்க்கலாம். இவைதான் மெஞ்ஞான முறை எனப்படும்.

ஆனால் போலி ஞான முறை என்னவெனில் தண்ணீரைக்கண்டு பிடிப்பவன் என்ற ஒருவனால் கண்டு பிடிக்கும் நீர்வளப்பமாகும். இதன் விபரம் என்னவெனில் ஒருவன் ஒரு செம்பை அல்லது கழியை கையிலேந்தி செல்லுங்காலை எந்தவிடத்தில் அவனுக்குத் தண்ணீர் சைகை உண்டாகின்றனவோ அங்கே தோண்டிப்பார்க்கிறான். அந்த இடத்தில் நீர் வளப்பம் தோன்றுவதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால், இந்த வித்தையை சோதனை செய்தவர்கள் தண்ணீர் கண்டுபிடிப்போன் காட்டு மிடங்களில் எல்லாம் நல்ல வசதி கிடைக்கவில்லையாம். இது அதிலுள்ள ஒருவித பிழையாகும். இரண்டாவது பிசகு என்னவெனில், இந்த வித்தையில் அநேக தோல்விகளும் உளவாம். மூன்றாவது என்னவெனில், பத்து இடத்தில் ஜலம் இருப்பதாகக் காட்டி 8, 9, இடங்களில் தவறிப்போமாகில், சொன்ன இரண்டொரு இடங்களில் தண்ணீர் கண்டதும் வெறும் தற்செயலாய் இருக்கலாம் என்று சொல்லவேண்டும். நான்காவது, எவ்விதமாக எந்தத் தூண்டுதல்மேல் எக்காரணத்தைக்கொண்டு ஜலத்தைக் கண்டுபிடிப்போன் குறித்த இடத்தில் ஜலம் உள்ளதாகச் சொல்லுகிறான் என்பது அவனுக்கே தெரியவில்லையாம்! இத்தியாதி குறைகள் அடங்கி உள்ளது இந்த போலி ஞானம்.

இந்த மாயவித்தைக்காரர் மரத்தின் கிளையை கையிலேந்தி நிலத்தின் மேல் நடக்கும்போது அந்தக் கிளை மூலமாக தண்ணீர் இருப்பதாகத் தெரிகிறது என்றதோர் கதையைக் கட்டி விடுகிறார்கள். மரக்கிளைக்கு மாயசக்தி எப்படி வந்ததோ. அது விளங்கவில்லை. இன்னுஞ் சிலருக்கு நடந்துபோகையில் தண்ணீர் அகப்படும் இடம் ஏதோ ஓர் உணர்ச்சியால் தெரிகிறது என்றும் சொல்லுகின்றார்கள். அது என்ன உணர்ச்சி என்பதும் விளங்கவில்லை. இவ்விதமாக எங்கேயோ ஓர் இடத்தில் ஜல வசதி கண்டுபிடிப்போர் ஜலப் பாங்கைக் கண்டுபிடித்து விட்டால் இத்தியாதி பொருத்தமில்லாததும் ஒன்றுக்கொன்று மாறானதும், தெரியக்கூடாததும் பரீட்சைக்கு இடங்கொடுக்காததுமான காரணங்களைக் குறிக்கின்றார்கள். இந்த வித்தையில் எல்லாம் மாயமாகவே இருக்கின்றது!

---

## "இளமணி"

சிங்கப்பூர் திராவிடர் இயக்க நண்பர் தோழர் க. வே. கோவிந்தசாமி—இலக்குமி அம்மையார் தம்பதிகட்கு 17—10—48ல் ஓர் ஆண் குழந்தை பிறந்து **இளமணி** என்று பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக போர்வாள் இதழுக்கு ரூ, 2 நன்கொடை அளிக்கப்பட்டது. [வரப்பெற்றோம்: நன்றி—ஆசிரியர்.]

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழிவுகள் நிகழ்ந்தன! நன்றியறிதல் தெரிவிக்கும்போது, ஏழைகளின் ஏற்றத்திற்காகவே தன் வாழ்நாளைச் செலவிட முடிவு செய்திருப்பதாக கோபாலும், கலையையும் மக்கள் தொண்டினையும் தம் இரு கண்களைப்போல் பாவித்து வாழ்வை நடத்தப் போவதாக குமாரும் உறுதிமொழி கூறினர்கள்.

கூட்டம் முடிவுற்றதும் குமார், கோபால் வேணி இவர்களோடு வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான்.

"குமார்!" என்று பழக்கமான ஒரு குரல் அழைப்பதைக் கேட்டதும் குமார் திரும்பிப் பார்த்தான். அழைத்தது வைத்தியர் வையாபுரி என்பதை அறிந்ததும் அவன் ஆச்சரியம் அடைந்தான். அவரைப் பார்த்து "எப்பொழுது மாமா வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"சிறிது நேரம் ஆகிறது வந்து!" என்று வையாபுரி கூறியதும், அவரை கோபாலுக்கும் வேணிக்கும் அவன் அறிமுகம் செய்து வைத்தான். பிறகு நால்வருமாக கோபாலின் வீட்டிற்குச் சென்றார்கள்.

வீட்டில் குமார் வேணியிடம் பேசியதையும் வேல் விழியை வேணி குமார்மீது வீசினதையும் கண்ட வையாபுரிக்குக் கோபமும் வருத்தமும் ஏற்பட்டன. எனினும் தம் மாற்றத்தை அவர் வெளியில் காட்டிக்கொள்ளாது குமாரோடும் மற்றவர்களோடும் சகஜமாகவே பேசிக்கொண்டிருந்தார்.

இரவு உணவு முடிந்ததும், மாடிக்கு வைத்தியரும் குமாரும் சென்றார்கள். தான் சிறைப்பட்டதையும், போலீஸ் இன்ஸ்பெக்டர் பூர்ணலிங்கம் செய்த உதவிகளையும், அவரது துப்பறியும் திறமையையும், காளிமுத்துவின் வரலாற்றையும், ஆரியனின் சூழ்ச்சியையும், விடுதலை அடைந்த விதத்தையும் குமார் ஒன்று விடாது விவரமாக வைத்தியரிடம் கூறிக்கொண்டு வந்தான்.

வையாபுரியின் காதுகளில் அவன் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தைகள் விழுந்தனவே ஒழிய அவரது உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் உருண்டு கொண்டிருந்தன! குமார், குமுதத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட கேட்காதது அவருக்கு எரிச்சலை உண்டாக்கியது. எரிச்சலை மட்டுமல்ல மன வேதனையையும் தந்தது. வேணியின் மோகவலையில் குமார் வீழ்ந்துவிட்டான் என்று அவர் முடிவு செய்துகொண்டார். தன் மகளின் எதிர்காலம் என்னவது என்பதை எண்ணியதும் அவர் உள்ளம் நடுங்கியது. முகத்தில் சோகமும் ஏமாற்றமும் பிரதிபலித்தன.

அவரது முகம் மாறியதைக் கண்டதும் குமார் தான் கூறி வந்த "கந்தபுராணத்தை" நிறுத்திவிட்டு "ஏன் மாமா ஒருமாதிரி இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

வைத்தியர் தன்னைச் சமாளித்துக்கொண்டு "ஒன்றுமில்லை இன்றிரவே திரும்பி வந்து விடுவதாக குமுதத்தினிடம் சொல்லி விட்டு வந்தேன். குழந்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்......நான் இங்கு நின்று விட்டேன்" என்று தயங்கித் தயங்கி கூறினார்.

வையாபுரி குமுதத்தைப்பற்றி நினைவு படுத்திய பிறகும் அவளைக் குறித்து ஒன்றும் கேட்காமலிருப்பது அழகல்ல என்று நினைத்து குமார் அவளைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தான்.

"மாமா, குமுதமும் அவள் கணவனும் சவுக்கியமா? குழந்தை ஏதாகிலுமிருக்கிறதா?" என்று உணர்ச்சியற்ற குரலில் குமார் வினவினான்.

குமுதம் விதவையானது இவனுக்குத் தெரியாது போலிருக்கிறதே என்றெண்ணி, அதனால்தான் இவன் வேணியைக் காதலிக்க ஆரம்பித்திருப்பான் என்ற தீர்மானத்திற்கு வந்தார், வையாபுரி.

குமாரை வைத்தியர் நிமிர்ந்து பார்த்ததும், அவர் கண்களில் நீர் தத்தளிக்க ஆரம்பித்தது.

"என்ன மாமா செய்தி?" என்று அவசரத்தோடு குமார் கேட்டான்.

"குமுதத்தின் கணவன் இறந்துவிட்டான், குமுதம் விதவையாகி வீட்டில்தான் இருக்கிறாள்!" என்று வையாபுரி கூறியதும்," "துரோகி! கணவனையும் இழந்துவிட்டாயா? வஞ்சகி நீ எங்கிருந்து வாழப்போகிறாய்?" என்று குமாரின் உள்ளம் பேசியது. மேலுக்கு வருத்தமடைபவனைப்போல அவன் நடிக்க ஆரம்பித்தான், நடிப்பு பூர்ண வெற்றியைத் தந்தது என்று சொல்லமுடியாது!

"குமுதம் உன்னை அழைத்துக் கொண்டு வரும்படி கூறினாள்" என்று வைத்தியர் சிறிது நேர தயக்கத்திற்குப் பிறகு, மகளுக்காக மானத்தையும் விட்டுக் கூறினார்.

அந்நேரத்தில் வேணி இரண்டு கிண்ணங்களில் பால் எடுத்துக்கொண்டு, அங்கு வந்து சேர்ந்தாள். ஒரு கிண்ணத்தை வையாபுரியிடம் கொடுத்துவிட்டு, "அத்தான், பால் சாப்பிடுங்கள்!" என்று புன்னகையோடும் பரிவோடும் கூறி மற்றொரு கிண்ணத்தைக் குமாரிடம் தந்தாள். "வேணி, நீ சாப்பிட்டாயா?" என்று அன்பு நிறைந்த குரலில் குமார் அழகியைக் கேட்டுவிட்டு பால் குடித்தான். இவற்றையெல்லாம் கண்ட குமுதத்தின் தந்தை வயிறுபற்றி எரிந்தது! வேணி சென்றுவிட்டாள்.

"எப்பொழுது குமார் நீ வருகிறாய்?" என்று வைத்தியர் மறுபடியும் கேட்டார்.

"நானா?......" என்று கூறி குமார் தயங்கினான். கடைசியாக தன் மனதிற்குள் ஒரு முடிவிற்கு வந்து,

"இன்னும் சில நாட்களுக்கு எனக்கிங்கு வேலை இருக்கிறது! பிறகு வருகிறேன்" என்றான்.

"அப்படியானால் இன்னும் எத்தனை நாட்கள் கழித்துதான் வருகிறாய்?"—வையாபுரி வேதனை நிறைந்த குரலில் வினவினார்.

"அதை எப்படி சொல்லமுடியும்? ஓய்விருக்கும்போது வருகிறேன்"—குமார் ஆசையற்ற, சலிப்பான குரலில் கூறினான்.

வையாபுரியின் தலை சுற்றியது! இந்தத் துக்கச் செய்தியை, ஏமாற்றச் செய்தியை எப்படி குமுதத்திடம் போய் கூறுவதென்றே அவருக்குப் புரியவில்லை. இதனைப் போய் சொல்லி அவள் மனக் கோட்டையைத் தூள்தூளாக்குவதைவிட இப்பொழுதே தன் இதயத் துடிப்பு நின்றுவிட்டால் நல்லதென்று அவர் எண்ணினார்.

பொழுது புலர்ந்ததும் வைத்தியர் சோலையூருக்குச் சென்றார். அத்தானும் அப்பாவும் வருவார்கள் என்று மிகுந்த ஆவலோடு குமுதம் விநாடிக்கு விநாடி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் தந்தை வருவதைக் கண்டதும் அவளுக்கு ஆறுதல் ஏற்பட்டது. அத்தான் உடன் வராததால் வருத்தமும் அடைந்தாள். வையாபுரி அருகில் வந்ததும், அவர்

முகம் அடைந்திருந்த விகாரமான கோலத்தைக் கண்டதும் அவள் உள்ளம் நடுநடுங்கியது.

"அப்பா! ஏன் அத்தான் வரவில்லையா?" என்று அவசரமாகக் கேட்டாள். வையாபுரி மௌனமாக இருக்கவே, வாய்திறந்து பேசும்படி அவள் மன்றாடினாள்.

சோர்ந்து அவர் உட்கார்ந்தார். அவளும உட்கார்ந்தாள்.

"என்ன நடந்தது சொல்லுங்களேன் அப்பா!" என்றுகெஞ்சினாள்.

"ஏமாந்தோம் அம்மா!" என்று சுருக்கமாக அவர் பதிலளித்தார்.

"என்ன? பத்திரிகை செய்தி பொய்யா?"

"அது உண்மைதான் அம்மா! குமாரைப்பற்றி நாம் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் பொய்" என்று வெறுப்பான குரலில் அவர் கூறியதைக் கேட்ட குமுதம் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

"அப்பா! விளக்கமாகக் கூறுங்களேன்!"

"எதை அம்மா நான் கூறுவது?. ...குமார் இனி இங்கு வருவது கஷ்டம்தான்"

"திரும்பவும் கைது செய்யப் பட்டுவிட்டாரா?"

"ஆமாம்! வேணி என்ற ஒரு பெண்ணால் கைது செய்யப்பட்டுவிட்டான்!" என்று திடீரென்று ஆத்திரமாக அவர் கூறியதும், ஏன் இதைக் கூறினேம் என்று தன்னைத்தானே பிறகுநொந்துகொண்டார்.

"அப்பா! வேணியா?" என்று கூறியதும், தனக்கு எதிரிலிருந்த எல்லா சாமான்களும், பூமியும் ஆடுவதைப்போல அவளுக்குத் தோன்றியது. அவள் தன் நினைவு இழந்தாள்! தரையில் சாய்ந்தாள்! வைத்தியர் கண்களில் நீர் சிந்தச் சிந்த, ஓடி தண்ணீர் கொண்டுவந்து அவள் முகத்தில் தெளித்து அவளைச் சுயநினைவுக்கு வரச்செய்தார்.

மெதுவாக அவளை அழைத்துச் சென்று கட்டிலில் படுக்கவைத்து விட்டு வையாபுரி அறையை விட்டு வெளியே வந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு உடைந்த உள்ளத்தோடு ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

கட்டிலிலிருந்த பெண்ணின் உள்ளத்தில் மனச் சூருவளி சுழன்று சுழன்று வீசியது! தேம்பித் தேம்பி அழுதாள்! எண்ணியதெல்லாம் பொய்யாயிற்றே என்று நினைந்து புலம்பினாள்! "சீரழிந்த என் வாழ்விற்குச் செங்கரும்பாய் அத்தான் இருப்பாரெண்ணினேனே!" என்று கதறி அழுது கண்ணீர் மல்கினாள்.

கட்டிலைவிட்டு அவள் கீழே இறங்கி அறையில் சிறிது நேரம் உலவினாள் வழிந்துகொண்டே இருந்த கண்ணீரை அடிக்கடி துடைத்துக்கொண்டாள்! கட்டிலில் திரும்பவும் உட்கார்ந்தாள். நீண்டநேரம் சிந்தனையில் ஆழ்ந்தவள் கட்டிலில் கண்களைத் துடைத்துக்கொண்டு புன்னகையை வரவழைத்துக் கொண்டு "அத்தான்! என் அத்தான்!" என்று முணுமுணுத்தாள்!

(தொடரும்)

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டுமே ஒழிய கடவுளும் மதமும் இரட்டைப்பிள்ளைகள் போல் பிறந்தவைகள் அல்ல.

எப்படி இருந்தாலும் மதங்களானவை இன்று சடங்காகவும் வேஷமாகவும் இருக்கின்றனவே ஒழிய கொள்கையாகக் கூட எந்த மதமும் அனுபவத்தில் இருக்கவில்லை. புஸ்தகங்களில் பல கொள்கைகள் இருந்திருக்கலாம்; இன்னும் இருந்துகொண்டிருக்கலாம். காரியத்தில் அக் கொள்கைகள் பெரிதும் அமுலில் இல்லை.

ஆகவே அமுலில் இல்லாத கொள்கைகளைக் கொண்ட மதங்களில் எந்த மதம் மேலானது என்றோ, எந்த மதக்கொள்கை மேலானது என்றோ வாதிப்பதானது ஆகாயத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் கோட்டைகளில் எது பலமான கட்டிடம் என்றும், எது வசிப்பதற்கு சவுகரியமானது என்றும் கேட்பதுபோல்தான் ஆகும்.

முதலாவதாக ஒரு மதத்துக்கு கொள்கைகள் எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும் என்பதைப்பற்றி முடிவு செய்துகொள்ள வேண்டும்.

ஒரு கொள்கை நல்ல கொள்கை என்றால் அதற்கு இரண்டு சக்திகள் இருக்கவேண்டும்.

அது எல்லா மக்களுக்கும் ஒன்று போல் அனுபோகத்தில் சமமாக நடத்தக் கூடியதாக இருக்கவேண்டும். அதோடு கூடவே அக்கொள்கைகள் எல்லா மக்களாலும் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் தானாகவே பின் பற்றித் தீரவேண்டியதாகவும் இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட தத்துவங்களைக் கொண்ட கொள்கையை இதுவரை எந்தப் பெரியவரும் கண்டுபிடிக்கவுமில்லை. எந்த மதமும் கொண்டிருக்கவும் இல்லை.

அது செய்தால் பாவம், இது செய்தால் மோக்ஷம். என்றும் அது செய்தால் லாபம் இது செய்தால் நஷ்டம் என்றும் அது செய்தால் தண்டனை இது செய்தால் தூக்கு என்றும், இப்படியாக பல நிர்ப்பந்தங்கள், பயம், தண்டனை, கண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகளாகவும் அமுலில் கொண்டுவர எப்போதுமே முடியாததாகவும் மனிதனால் சாதாரணமாக செய்யக்கூடியதும் செய்வதற்கு ஆசையுண்டாக்கக் கூடியதும் அல்லாததாகவும் இருக்கக்கூடிய கொள்கைகளையே தான் எந்த மதமும் கொண்டிருக்கிறது.

எந்தக் கொள்கையாவது கடவுளால் உண்டாக்கப்பட்டதாகவோ அல்லது கடவுளுக்கு இஷ்டமானதாகவோ இருந்திருக்குமானால் அது மக்களுக்கு மிகவும் இஷ்டமானதாகவும், செய்வதற்கு மிகவும் ஆசையுடையதாகவும், சுலபத்தில் செய்து முடிக்கக்கூடியதாகவும் இருந்திருக்க வேண்டாமா? கடவுளுக்கு இஷ்டமான கொள்கை மனிதனுக்கு கசப்பானதாகவும், பெரும்பான்மையோருக்கு செய்வதற்கு முடியாததாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ஆகவே கடவுளின் பேரால் மதத்தின் மூலம் மத கர்த்தாக்களால் சொல்லப்பட்ட கொள்கைகள் என்பவை சொன்னவர்களுக்கு அவர்களது புத்தித் திறமையும், அக்காலத்துக்கு சரி என்று பட்ட கருத்துக்களையும் கொண்டவைகளே தவிர எந்தக் கொள்கையும் எந்தக் கடவுளாலும் சிருஷ்டிக்கப்பட்டதல்ல வென்றே சுயமரியாதைக்காரர்கள் கருதுகிறார்கள்.

இன்றும் மதமானது மக்களின் கூட்டு வாழ்க்கையின் அவசியத்துக்கு ஏற்ற கொள்கைகளைக் கொண்டது என்பதுடன் அவை பகுத்தறிவுக்கு ஒத்ததாகவும், கால தேச வர்த்தமானத்துக்கு ஏற்ப திருத்திக்கொள்ளக் கூடியதாகவும், சகல மக்களுக்கும் பலன் ஒன்றுபோல் உண்டாகக் கூடியதாகவும் இருக்கத்தக்க கொள்கைகள் கொண்டது என்றால் அதை சுயமரியாதைக்காரர்கள் மறுப்பதற்கு முன்வரமாட்டார்கள்.

---




தொடர்கதை :

இருபத்திமூன்ருவது பகுதி

## "அப்பா ! வேணியா"?

மூன்று நாட்கள் சென்றன. விடுதலை அடைந்த தன் அத்தான் ஏன் இன்னும் வீடு திரும்பவில்லை என்றெண்ணியதும் குமுதத்துக்குச் சிறிது அச்சம் தோன்றியது. அந்தப் பயம் நொடிக்கு நொடி வளர்ந்துகொண்டே சென்றது. அவள் ஏதேதோ எண்ணத் தொடங்கினுள். மங்கையின் மகிழ்ச்சி மங்கிக்கொண்டே வந்து, மனப்புயல் வீசத் தொடங்கியது. என் மீது ஆசை இருந்தால்' அவர் மூன்று நாட்களாக இங்கு வராமலிருந்திருக்க முடியுமா? ஒரு வேளை என்னை மறந்து விட்டாரோ? உண்மை அதுவானல் என் மனக்கோட்டை என்னுவது? வாழ்வு என்னுவது?" என்று அவள் எண்ணியதும், உள்ளத்தில் இடி விழுந்ததுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது! என்ன செய்வதென்று புரியாத நிலையில், ஏக்கமும் ஏமாற்றமும் நிறைந்தவளாக அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

பத்திரிகையும் கையுமாக வையாபுரி அங்கு வந்தார். முகம் வாடி சோகத்தோடு குமுதம் அமர்ந்திருந்ததைக் கண்டதும் சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தார்.

"இன்னுமா குமுதம் உனக்கும் சோகத்திற்கும் தொடர்பு இருக்கிறது?"

"விடுதலையாகி மூன்று நாட்களாகியும் இன்னும் ஏன் அப்பா, அத்தான் வரவில்லை?"

"குமுதம், இன்னும் குழந்தையாகவே இருக்கிருய் அம்மா நீ!... குற்றமற்றமணிகளான இரு இளந் தலைவர்கள் விடுதலை அடைந்தால், உடனே வீட்டிற்கு வரவிடுவார்களா மக்கள்! எவ்வளவு ஆரவாரம் செய்வார்கள்! எத்தனைப் பாராட்டுக் கூட்டங்களிருக்கும்!... இதனை நீ கொஞ்சம்கூடத் தெரிந்து கொள்ளாது அழ உட்கார்ந்து கொண்டாய்! இதோ பாரேன், பத்திரிகையை" என்று வைத்தியர் கூறி பத்திரிகையை மகளிடம் தந்தார். குமுதம் அதிலிருந்த செய்தியை அவசர அவசரமாகப் படித்துப் பார்த்தாள்.

"இன்று பழத்தூரில் அத்தானுக்கும் கோபாலுக்கும் வரவேற்புக் கூட்டம் என்றல்லவா இருக்கிறது?"

"ஆமாம், ஆமாம், ஆமாம்!"

"என்ன அப்பா ஆமாம்! முதலில் வரவேற்க இங்கு நாம் காத்திருப்போம் என்பது தெரிந்திருந்தும், ஊரார் வரவேற்புக்கு அவர் எப்படி அப்பா ஒத்துக்கொள்ளலாம்?'

"அவன் வந்ததும் அதனைக் கேள் அம்மா! என்னைக் கேட்டால்?......"

குமுதத்தின் முகத்தில் திரும்பவும் மகிழ்ச்சி தோன்றியது. இருவரும் சிறிது நேரம் மௌனமாகவே உட்கார்ந்திருந்தனர். சிந்தனையிலிருந்து விடுபட்ட சிற்றிடையாள் பேச ஆரம்பித்தாள்.

"அப்பா எனக்கொரு யோசனை தோன்றுகிறது!"

"சொல் அம்மா!"

"சிறையிலிருந்து வெளியில் வந்ததும், சிங்கார நகருக்கே சென்று அவரை வரவேற்கவில்லை என்று அத்தான் கோபித்துக் கொண்டிருப்பாரோ?"

வையாபுரி சிரித்துக்கொண்டே, "குமுதம், உன் மனதில் இன்னும் என்னென்ன சந்தேகங்கள் தோன்றுகின்றன, சொல்பார்க்கலாம்!" என்று கூறிவிட்டு புறப்படத் தயாராஞர்.

"அப்பா, நீங்கள் ஒன்று செய்தால் நல்லதென்று எனக்குப் படுகிறது!"

"உம், அதனையும் சொல் அம்மா, கேட்கிறேன்"

"நீங்கள் இப்பொழுதே பழத்தூருக்குச் சென்ருல், கூடவே இருந்து அவரை அழைத்துக் கொண்டு வந்து விடலாம்".

"கூட்டம் முடிந்ததும், நாளைய தினமே அவன் வரப்போகிருன். நான் வேறு எதற்குப் போகவேண்டும்?"

"விடுதலையாகிய மூன்று நாட்களாகியும் நாம் அவரைப் போய்ப் பார்க்காவிட்டால் அவர் என்ன எண்ணிக்கொள்வார்? அன்பில்லை என்றுதானே நினைத்துக்கொள்வார்?"

குமுதம சிறிது நேரம் கெஞ்சிய பிறகு, வையாபுரி அதற்கு இசைந்து அன்று பிற்பகல் பழத்தூருக்குப் புறப்பட்டார்.

பழத்தூருக்கு அவர் போய்ச்சேர்வதற்கும் வரவேற்புக் கூட்டம் ஆரம்பமாவதற்கும் ஏறத்தாழ சரியாக இருந்தது.

சுமார் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்த கூட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த உயரமான மேடையின் மீது குமாரும் கோபாலும் ஏறி நின்றதும், வான் அதிர வாழ்த்தொலி எழும்பியது! விடாது கைதட்டி ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர் மக்கள்! குமாருக்கும் கோபாலுக்கும் மலர் மாலைகள் பல சூட்டப்பட்டன. வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன! சொற்

(10-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)